


# பெண்களின் தலைமயிர்

## என்பதின் பேரில் கேள்விகளும் பதில்களும்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# அழகுபடுத்தும் கடை ஒன்றை நான் வைத்து நடத்துவது தவறா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #19

*Q.250.* **அழகுபடுத்தும் கடை ஒன்றை நான் வைத்து நடத்துவது தவறா? நான் அழகுபடுத்தும் தொழிலை செய்பவள், கிறிஸ்தவ பெண்கள் தங்கள் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்வதை நான் ஆதரிப்ப தில்லை; நான் மற்றவர்களின் தலை மயிரைக் கத்தரித்து அதற்கு சாயமும் போடுகிறேன்.**

*167. அருமை சகோதரியே, உனக்கு என்ன சொல்வதென்று எனக்குத் தெரிய வில்லை. கவனி, ஸ்திரீகள் தங்கள் தலைமயி ருக்கு சாயம் போடுவதைக் குறித்து என்னால் ஒன்றும் சொல்ல முடியாது. அதற்கு விரோத மான வேதவசனம் எதுவும் எனக்கில்லை. நான் வேதவசனத்தில் மட்டுமே நிலைகொண் டிருக்க வேண்டும். பார்? அவ்விதம் அவர்கள்*

செய்யக் கூடாது என்று வேதம் உரைக்க வில்லை. அவள் நீண்ட தலைமயிரை உடையவளாயிருக்க வேண்டும் என்று தான் வேதம் போதிக்கிறது. அதற்கு பிறகு, எங்கே போவதென்று எனக்குத் தெரியவில்லை. யார்? அதைக் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது.

***168.*** எனக்கு நெருங்கிய நண்பரான ஒரு போதகர் இங்கு எங்கோ இருக்கிறார். அன் றொரு நாள் நாங்கள் ப்ளூ போர் என்னும் விடுதிக்கு நடந்து சென்று உணவு அருந்தி னோம். அவர் என்னிடம், "என் மனைவி உமக்கு முன்னால் வர வெட்கப்படுகிறாள்" என்றார். அவள் பரிசுத்தமுள்ள, தேவபக்தி யுள்ள ஸ்திரீ, நற்பண்பு கொண்டவள், பாட்டியாகிவிட்டவள். அவள் நல்லவள், சுத்தமுள்ளவள், உண்மையிலேயே... என் மனைவிக்கு இவள் மேல் அலாதி பிரியம். அவள்... அவள் இங்கு உட்கார்ந்திருக்கி றாளோ என்று எனக்குத் தெரியாது; அவள் இங்கிருக்கிறாள் என்று நினைக்கிறேன்.

அவளுடைய கணவர் இங்கிருக்கிறார் என்று நினைக்கிறேன். அவர் என்னிடம், "உங்கள் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு அவள் தலைமயிரை நீளமாக வளர்க்கத் தொடங்கி விட்டாள். அது சரியென்று அவள் அறிந்து கொண்டாள். ஆனால் அவள் தலைமயிருக்கு சில சாயங்களை உபயோகித்து வந்தாள். அவள் உமக்கு முன்பாக வருவதற்கு முன்பு அதையெல்லாம் போக்கிவிட்டு வரவேண்டு மென்று மிகவும் பிரயாசப்படுகிறாள்" என்றார்.

**169.** இப்பொழுது பார், அருமை சகோ தரியே, அதை நான் மிகவும் மதிக்கிறேன். அவ்விதம் செய்யும் ஸ்திரீயின் மேல் எனக்கு மிகுந்த மதிப்புண்டு. சில ஸ்திரீகள் தங்கள் தலைமயிரை எல்லா விதங்களிலும் அலங் கரித்துக் கொண்டு, உங்கள் கால்களில் துப்பி கர்வம் கொண்டவர்களாய், எந்த மரியாதை யும் கொடுக்காமல் நடக்கின்றனர். இயேசு, "அவர்களுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்றார். பாருங்

*கள்? உன் மனப்பான்மையை நான் மதிக்கிறேன், அதற்காக தேவன் உன்னை ஆசீர்வதிப்பார்.*

***170.*** *ஆனால், சகோதரியே, தலைமயிருக்கு சாயம் போடும் விஷயத்தில் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. அதை வேத வசனத்தைக் கொண்டு என்னால் ஆதாரப்படுத்த முடியாது. எனவே அது உன்னை பொறுத்தது. பார்? அதை நீ செய்ய விரும்பினால், அதனால் எனக்கு ஆட்சேபனை ஒன்றுமில்லை. எனக்குத் தெரிந்த வரையில், என் சபையில் அந்த வழக்கம் கிடையாது. நீ செய்ய விரும்பினால்... வேதத்தில் இல்லாத எந்த ஒன்றும், நல்லது, நீ... அது உன்னைப் பொறுத்த விஷயம். பார்? ஆனால் என் ஆலோசனையை உனக்குத் தருவேன், பார், எனக்குத் தெரிந்த வரையில்... அழகாகக் காணப்பட வேண்டுமென்பது ஸ்திரீயின் இயல்பு என்று உனக்குத் தெரியும்; அவள் அந்த விதமாக இருப்பதாக கருதப்படுகிறாள்.*

***171.*** *மானிட வர்க்கத்தைத் தவிர மற்றெல்லா வர்க்கத்திலுமே, ஆண் தான் மிகவும் அழகுள்ளது என்று உனக்குத் தெரியும். பறவை, பசு, எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். மாடு இனத்தை எடுத்துக் கொள்வோம். எது மிகவும் அழகுள்ளது? சுருங்கிப் போன கொம்பையுடைய பசுவா அல்லது பெரிய காளையா? மானை எடுத்துக் கொள், எது மிகவும் அழகுள்ளது, பெண் மானா? ஆண் மானா? கலைமானை எடுத்துக் கொள்வோம், எது மிகவும் அழகுள்ளது? ஆணா? பெண்ணா? நீர் எருமை, எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். பறவை இனத்தை எடுத்துக்கொள். சேவலா, கோழியா, எது மிகவும் அழகுள்ளது? பார்? வர்க்கங்கள் அனைத்திலும் எப்பொழுதும் ஆண்தான் மிகவும் அழகுள்ளது. ஆனால் மானிட வர்க்கத்தில் மாத்திரம் பெண் தான் மிகவும் அழகுள்ளவள். ஏன்? அவள் தான் வீழ்ச்சி உண்டாக காரணமாயிருந்தாள். சாத்தான் அவளை அங்கேயே தெரிந்து கொண்*

டான், அழகு பிசாசினால் உண்டானது. பார்?


***172.*** சாத்தான் தான் தேவதூதர்களிலேயே மிகவும் அழகுள்ளவன். அவன் சிங்கா சனத்தை மூடிக் கொண்டிருந்த கேரூபின், ஸ்திரீ முன்னைக்காட்டிலும் இப்பொழுது எவ்வளவு வித்தியாசமாக இருக்கிறாள் என்று பார். எத்தனை பேர் பெர்ல் ஓப்ரயனைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? மக்கள் கரங்களைப் பார்ப்போம், முதியோரில் சிலர். நிச்சயமாக. பாருங்கள்? அவள் அமெரிக்கா விலேயே மிகவும் அழகுள்ள பெண் என்று கருதப்பட்டவள். ஆனால் இன்று தெருவில் காணும் எந்த ஒரு இளம் பெண்ணும் அவ ளைக் காட்டிலும் இரட்டிப்பாக அழகுள்ள வளாயிருக்கிறாள். ஏன்? அதை தான் வேதம் உரைத்துள்ளது. "தேவகுமாரர் மனுஷகுமா ரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்க ளென்று கண்டு... அந்த துரோகிகளின் கூட்டம் தான் பூமிக்கு ஜலப்பிரளயம் அனுப் பப்பட காரணமாயிருந்தனர், தேவன் மானிட

*வர்க்கம் முழுவதையும் அழித்து போட்டார். பாருங்கள்? இன்றைக்கு எல்லாமே ஹாலி வுட்டையும், அழகையும், அது போன்றவை களையும் ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஆனால் அழகு என்பது இருதயத்தில் மறைந் திருக்கிற ஒன்றேயன்றி (பாருங்கள்?) அது வெளிப்புற தோற்றம் அல்ல. "அவர்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளட்டும், ஆனால் புறம்பான அலங்கரிப்பினால் அல்ல, உள்ளான அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங் காரமாயிருக்கக் கடவது" (1 பேதுரு 3:3-4), அதுதான் கிறிஸ்தவன்.*

*எனவே இப்பொழுது, உன் கேள்விக்கு, சகோதரியே, உனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.*



# இப்பொழுது, நீங்கள் உலகத்தாரைப் போல் காணப்படவோ அல்லது நடந்து கொள்ளவோ கூடாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #19

***Q.251.* சகோ. பிரன்ஹாமே, 1 தீமோத்தேயு 2:9ன்படி, ஒரு ஸ்திரீ மயிரைப் பின்னக் கூடாதா? 'பிராய்ட்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு மயிரைப் பின்னுதல் (braid) என்று அர்த்தமா?**

*173. இப்பொழுது பார், சகோதரியே, இப்பொழுது இது... போன கேள்வியைத் தொடர்ந்து இது வந்ததைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அதை நான் அந்த இடத்தில் பொருத்தவில்லை. அது தானாகவே தொடர்ந்தது நல்லது.*

*கவனியுங்கள், அந்நாளில், பின்னப்பட்ட தலைமயிர் ஒரு தெருப் பெண்ணுக்கு (வேசிக்கு) அடையாளமாயிருந்தது. அவள்*

அதை தான் செய்தாள். தன் தலைமயிரைப் பின்னினாள். பவுல் கிறிஸ்தவர்களுக்கு "மயிரைப் பின்னுதலினால் உங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டாம்..." என்றான். ஏனெனில் அது உலகில் உள்ள மற்றவர்களைப் போல் காட்சியளித்தது.

*174.* இப்பொழுது, நீங்கள் உலகத்தாரைப் போல் காணப்படவோ அல்லது நடந்து கொள்ளவோ கூடாது. பாருங்கள்? ஸ்திரீகள் அவர்களை விட வித்தியாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். பாருங்கள்? இல்லை, இப்பொழுது, பின்னிய தலைமயிர்... இப்பொழுது, இன்றைக்கு பின்னிய தலைமயிர் அழகாயும், உலகத்தின் நாகரீகத்துக்கு மிகவும் அப்பாற்பட்டதாயும் உள்ளது. ஸ்திரீகள் இன்று தங்கள் தலைமயிரை அலங்கரித்துக் கொள்ளும் விதத்தை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். உங்கள் தலைமயிரை நீங்கள் எந்த விதத்திலும் வைத்துக் கொள்ளுங்கள்; ஆனால் உலகத்தாரைப் போல் மட்டும்

*காணப்படாதீர்கள்! உலகத்தாரைப் போல் காணப்படாதீர்கள், அவர்களைப் போல் உடுத்திக் கொள்ளாதீர்கள்! அவர்கள் குட்டை கால் சட்டைகளை அணிந்து கொண்டால், நீங்கள் உடைகளை அணிந்து கொள்ளுங்கள். அவர்கள் தங்கள் தலைமயிரை கத்தரித்துக் கொண்டால், அல்லது வேறெதாகிலும் செய்து கொண்டால்... நீங்கள் உங்கள் தலை மயிரை வளரும்படி விட்டு விடுங்கள். பாருங்கள்?*

*175. மயிரைப் பின்னுதல்... கேள்வி என்னவென்றால், 'ப்ராய்ட்டும் (broid), 'ப்ரேய்ட்'டும் (braid) ஒரே அர்த்தமுடையதா? ஆம், அது சரி. இப்பொழுது, தெரு வில்...*

*176. 'ப்ரேய்ட்' செய்யப்பட்ட தலைமயிர் என்றால் என்ன அர்த்தம் என்பதை கண்டு பிடிக்க நான் பல ஆண்டுகளுக்கு முன்பே அகராதியைத் தேடினேன். பாருங்கள்? ஸ்திரீ, உண்மையில், முன் காலத்து ஸ்திரீகள் தங்கள்*

தலைமயிரை பின்னால் இழுத்து அதைக் கட்டினார்கள், ஏறக்குறைய இன்று அவர்கள் 'போனி டேய்ல் *(pony tail)* கட்டுவதைப் போல. அவர்கள் எல்லாவிடங்களுக்கும் அவ்விதமே சென்றனர். அவர்கள் அங்கிகளை உடுத்திக்கொண்டனர், ஆனால் ஒரு தெரு வேசியோ தன் தலைமயிரை தலையிலிருந்து பின்னி, அதை இப்படி சுற்றி விட்டு, தலையில் பூ வைத்துக் கொள்வது வழக்கம் - ஒரு விதமான வேசி. இன்றைக்கு நாம் ஒரு வேசியை காண்பது போல, அவள் உடுத்தும் விதம். நான் வேசியை ஃப்ளாப்பர் *(flapper)* என்று அழைக்கிறேன், ஏனெனில் நான் வயதானவன். என் காலத்தில் அவர்கள் அவ்விதம் தான் அழைப்பார்கள். இன்றைக்கு அவர்கள் என்னவென்று அழைக்கின்றனர்? நான்... எனக்குத் தெரியாது. 'சிக்ஸ்' *(chicks)* அப்படி ஏதோ ஒரு பெயரால். எனவே... அது என்னவானாலும். அவர்களுக்கு நீங்கள் என்ன பெயர் கொடுத்தாலும், அவர்கள் அதை விரும்புவார்கள்.



# சகோ. பிரன்ஹாமே, ஒரு கிறிஸ்தவள் தன் தலைமயிரைச் சுருள வைக்கும் ‘பின்’களை (pin curls) போட்டுக் கொள்வது தவறா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #20

*Q.279. இப்பொழுது, இக்குவியலிலிருந்து நான் கையிலெடுத்த முதலாம் கேள்வி:*

**சகோ. பிரன்ஹாமே, ஒரு கிறிஸ்தவள் தன் தலைமயிரைச் சுருள வைக்கும் 'பின்'களை (pin curls) போட்டுக் கொள்வது தவறா? மேலும், அவளுடைய உடையின் கைகள் (sleeves) எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்? நன்றி. ஒரு சகோதரி.**

*28. இது அந்த ஸ்திரீக்கு மிகவும் முக்கிய மானதாக உள்ளது. இங்குள்ள சகோதரராகிய நம்மில் சிலர், "ஓ, முட்டாள் ஸ்திரீ" என்று நினைக்கக் கூடும். ஆனால் அவளுக்கு அது முட்டாள்தனமாகத் தோன்றவில்லை. அவள் அறிய விரும்புகிறாள். இப்பொழுது தலை மயிரை, அது என்ன, பன்றிவாலைப் போல்*

*(pig tails) சுருள வைத்துக் கொள்வது. நான் வருந்துகிறேன். நான் அவ்விதம் கூற நினைக்கவில்லை... அது... நான் வருந்து கிறேன். தலைமயிரைச் சுருள வைக்கும் 'பின்'களை போட்டுக் கொள்வது. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். பின் 'செட்டு'கள் - பன்றி வால். அநேக ஆண்டுகளுக்கு முன்பு அவ்விதம் தான் பெண்கள் தங்கள் தலை மயிரில் அணிந்து கொள்வது வழக்கம். உங்களுக்கு ஞாபகமுள்ளதா, ஒருவிதமான... அது சரிதானே? அவர்கள் அதை 'பன்றிவால்' (pig tails) என்று அழைப்பதுண்டு. மயிர் சுருள்கள் கீழே தொங்கிக் கொண்டிருக்கும். இல்லை, 'பின்' சுருள்கள், என்னை மன்னித்துக் கொள், சிநேகிதியே.*

***29.*** *“உடையின் கைகளை எவ்வளவு நீள மாக அவள் அணிந்து கொள்ள வேண்டும்?” இப்பொழுது, அதைக் குறித்து ஒன்றும் கூறப்படவில்லை என்று நினைக்கிறேன். எனக்குத் தெரியாது. பார்? வேதத்தை நான்*

ஆதாரமாகக் காண்பிக்க முடியாத எதைக் குறித்தும் நான் அதிகம் பேச விரும்ப வில்லை.

***30.*** இப்பொழுது. இதை நான் என் கருத்திற்கேற்ப உன்னிடம் கூறுகிறேன், ஏனெனில் இதற்கு ஆதாரம் காட்ட எனக்கு வேதத்தில் ஒன்றுமேயில்லை. தலைமயிரைக் குறித்து நான் ஸ்திரீகளுக்கு வேதத்திலிருந்து எடுத்துக்காட்டக் கூடிய ஒன்றே ஒன்று, அவர்கள் அதைக் கத்தரிக்கக் கூடாது என்பதே. அவர்கள் தலைமயிரை எவ்விதம் போட்டுக் கொள்ள வேண்டும் என்பது அவர்களைப் பொறுத்தது. தலைமயிரைச் சுருள் வைக்கும் 'பின்'களைக் குறித்து, உண்மையில், அவை என்னவென்று எனக்குத் தெரியாது. துணிகள் பறந்து போகாமலிருக்க போடும் 'கிளிப்'புகளைப் போல் காணப்படு பவைகளை அவர்கள் தலையில் போட்டுக் கொள்கிறார்களே, அதுவாக இருந்தாலன்றி. நான்... எனக்குத் தெரிந்த ஒன்றே ஒன்று...

*__31.__ உடைகளின் கைகளின் நீளம், நீ கிறிஸ்தவளாயிருப்பதால், அவையெல்லாவற் றையும் குறித்து தேவன் உன்னிடம் கூறு வாரென்று நினைக்கிறேன். பார்? ஒரு கிறிஸ் தவள் என்ற முறையில், அந்த விஷயத்தில் நீ என்ன செய்ய வேண்டுமென்று உனக்குத் தெரியும் என்று நம்புகிறேன். தேவன் ஒரு குறிப்பிட்ட நீளத்தை நிர்ணயிப்பதாக எனக் குத் தோன்றவில்லை. நீ நாணயமுள்ளவளா யும், மதிக்கத்தக்கவளாகவும், சுத்தமாகவும் காட்சியளித்தால், அது சரியென்று நினைக் கிறேன். இல்லையா? பார்? இது என் கருத்து, இதுநான் கூறுவது, ஏனெனில், அதை வேத வசனங்களினால் ஆதாரம் காண்பிக்க என்னால் இயலவில்லை.*

*__32.__ தலைமயிருக்கு நிறச் சாயம் பூசிக் கொள்வதைக் குறித்த ஒரு கேள்வி இன்று காலையில் எழுந்தது என்று எண்ணுகிறேன். அதைக் குறித்தும் என்னால் ஒன்றும் கூற இயலாது. எனக்குத் தெரியாது. உங்கள்*

*தலைமயிருக்கு நிறச் சாயம் பூசிக் கொள்ளக் கூடாது என்று கூறும் வேதவசனத்தை எனக்கு காண்பிக்க இயலாது. இப்பொழுது, அது...*

*ஸ்திரீகளாகிய நீங்கள் காண்பதற்கு அழகாயிருக்க விரும்புகிறீர்கள். நீங்கள் காண்பதற்கு அழகாயிருக்க வேண்டும். சகோ. பிரன்ஹாம், பிள்ளைகளாகிய உங்களுக்கு விரோதமாயில்லை. நீங்கள் என் பிள்ளைகள்; உங்களை நான் நேசிக்கிறேன், உங்களை நோக்கி கூச்சலிட நான் விரும்பவில்லை. நான் காரணமில்லாமல் அவ்விதம் செய்வதில்லை. உங்களுக்கு நான் உதவி செய்யவே முயல்கிறேன்.*

***33.*** *இப்பொழுது பாருங்கள், உங்களைக் கேட்கிறேன்... அந்த கேள்விக்கு விடையாக இதை நான் கூறுகிறேன். நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? இந்த ஒலிநாடாவைக் கேட்கப் போகும் சகோதரிகளே, இதோ அது. அதைக் குறித்து ஒரு கேள்வி எழு*

மானால், அதைச் செய்யாதீர்கள். ஆனால் நீங்கள் தேவனுடைய ஆவியினால் நிறைந்து, அதைச் செய்ய வேண்டுமென்று மனதில் எண்ணம் கொண்டால், அது வேதம் கூறுவதில் தலையிடாமல், எந்த கேள்வியையும் எழுப்பாமல், அது கர்த்தருடைய சித்தமென்று நீங்கள் பூரண திருப்தியடைவீர்களானால், அதைச் செய்யுங்கள் (பாருங்கள்?), ஏனெனில் அதைச் செய்யக்கூடாதென்று எந்த வேதவசனமும் கூறவில்லை.

*34.* ஏசாயா 5ம் அதிகாரம், அந்த அதிகாரம் தான் என்று நினைக்கிறேன், ஸ்திரீகளைக் குறித்தும் அவர்கள் எவ்விதம் மாற்று உடைகளை அணிவார்கள் என்றும் உரைக்கிறதென்று எனக்குத் தெரியும். ஆனால் அது பெருமையும், பெரிதாகக் காண்பித்துக் கொள்வதுமாயிருக்கிறது. அதை நீங்கள் பெருமைக்காகச் செய்வீர்களானால், அது தவறு. பாருங்கள்? தேவனுக்கு முன்பாக உங்கள் இருதயத்தை சோதித்துப் பாருங்கள்.

அதைச் செய்யக் கூடாது என்ற வேதவாக்கியம் இல்லாமலிருந்து ஆவியானவர் உங்களை நடத்துவாரானால், நீங்கள் அதைச் செய்யுங்கள். ஆனால் உங்கள் தலைமயிர் நீளமாயிருக்க வேண்டுமா அல்லது குட்டையாயிருக்கலாமா என்னும் விஷயத்தில் நீங்கள் நீண்ட தலைமயிரை உடையவர்களாக இருக்க வேண்டும். அப்படித்தான் வேதம் கூறுகிறது.

*35.* இங்கு ஒரு கேள்வி உள்ளது. அதற்கு இப்பொழுதே பதில் சொல்லி விடுகிறேன். அது இங்குள்ளது. அதை இன்று காலையில் அல்லது வேறு எப்பொழுதோ கண்டேன். "நீங்கள் எப்பொழுதுமே ஸ்திரீகளைக் குறித்து, அவர்கள் எவ்விதம் தங்கள் தலைமயிரை அலங்கரித்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்கள், ஆனால் ஆண்களைக் குறித்து நீங்கள் ஒன்றுமே சொல்வதில்லை" என்று அக்கேள்வியில் எழுதப்பட்டுள்ளது.

***36.*** *ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயைப் போல் நீண்ட தலைமயிர் தன் முதுகில் தொங்கிக் கொண்டு இங்கு வருகிறதை நான் கண்டால், நான், "மிஸ்டர், நீர் ஏன் அம்பட்டன் கடைக்குச் செல்லக் கூடாது? நீர் ஒரு பெண் ணைப் போல் காட்சியளிக்கிறீர்" என்பேன். பாருங்கள்? ஆனால் மனிதர் சாதாரணமாக அவ்விதம் செய்வதில்லை. பாருங்கள்? மனிதர். மனிதர் பிழையற்றவர் என்று நான் கூற வரவில்லை, அவர்கள் ஸ்திரீகளைப் போலவே குற்றமுள்ளவர்கள்.*

*இதைக் கூற முற்படுகிறேன். அவ்விதம் செய்யத் தன் மனைவியை அனுமதிக்கும் ஒரு மனிதன் இரட்டிப்பாக குற்றமுள்ளவனாயிருக் கிறான். ஏனெனில் வீட்டார் அவன் சொற் படி தான் நடக்க வேண்டும். அந்த மனித னுக்கு அவனுடைய சொந்த வீட்டாரின் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாமல் போனால், அவன் எவ்விதம் அதை தேவ*

னுடைய வீட்டில் செய்ய முடியும்? பாருங்கள்?

**37.** இங்கு வருகை தருகின்ற நமது ஸ்திரீகளின் கூட்டத்தைக் குறித்து நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். இதை நான் மரியாதையோடும் அன்போடும் கூறு கிறேன். இது உண்மையென்று தேவன் அறிவார். தென் பகுதியில் எனக்கு ஒரு போதகர் நண்பர் இருந்தார். நான் அதுவரை கண்டிராத அவ்வளவு சுத்தமாகக் காணப் படும் சபைகளில் ஒன்றை அவர் கொண் டிருந்தார். ஸ்திரீகளைக் குறித்து பேசுகையில், மிகவும் அழகான பெண்கள் அங்கு வந்து பரிசுத்தமுள்ளவர்களாய், தேவபக்தியுள்ளவர்க ளாய், நீண்ட தலைமயிரை உடையவர்களாய் உட்காருவார்கள். அந்த சபைக்கு சென்று அவர்களைக் கண்டு பேரானந்தமடைய நான் விரும்பினதுண்டு. ஆனால் இன்றைக்கு அவர் களையும் மங்கச் செய்யும் ஸ்திரீகளைக்

*கொண்ட ஒரு சபையை கர்த்தராகிய இயேசு எனக்கு அருளியிருக்கிறார்.*

***38.*** *நான் நீசத்தனமாக இருக்க வேண்டும் என்பதற்காக உங்களைக் கடிந்து கொள்வ தில்லை. உங்களைக் குறித்து நான் புளாங் கிதம் அடைகிறேன். சாத்தான் எங்காவது காலடி எடுத்து வைக்க எனக்கு பிரிய மில்லை. நீங்கள் மேல் நோக்கிச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறேன், பின் நோக்கி அல்ல. எந்த ஒரு மனிதனும் நயமான சொற்களினால் உங்களை வஞ்சிக்க இடம் கொடாதீர்கள். "ஓ, நல்லது. அது வல்ல..." என்று யாராகிலும் கூற அனுமதிக் காதீர்கள். பாருங்கள்? அப்படித்தான் சாத் தான் ஏவாளுக்கு வார்த்தையை வியாக்கியா னித்துக் கொடுத்தான் பாருங்கள்? வார்த்தை என்ன உரைக்கிறதோ, அதை அப்படியே விசுவாசியுங்கள். சரி.*



# எந்த ஸ்திரீயும் அவளுடைய தலைமயிரைக் கத்தரித்துக் கொள்வது தவறாகும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #20

*Q.297.* **சகோ. பிரன்ஹாமே, இளம் விவாகமாகாதவர்** *(அது யாரென்று குறிப்பிடவில்லை)* **தங்கள் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்வது தவறா?** *அது ஒரு ஸ்திரீயென்று நினைக்கிறேன்.*

*152. ஆம்! எந்த ஸ்திரீயும் அவளுடைய தலைமயிரைக் கத்தரித்துக் கொள்வது தவறாகும்.*


சகோ.
பிரன்ஹாமே,
ஒரு ஸ்திரீ தன்
தலைமயிரை
சுருள வைத்துக்
கொள்வது
தவறா?

## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

---

# செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #20

---

*Q.301.* **சகோ. பிரன்ஹாமே, ஒரு ஸ்திரீ தன் தலைமயிரை சுருள வைத்துக் கொள் வது தவறா?**

*162. அதற்கு நான் ஏற்கனவே பதிலளித் திருக்கிறேன். நிச்சயமாக, எனக்குக் கவலை யில்லை, அதை நீளமாக வைத்திருங்கள். பாருங்கள்? நான்... எனக்குத் தெரியும் நீங்கள்... பெண்களாகிய உங்களிடம் இதை நான் கேலியாக கூறவில்லை. பாருங்கள்? நான் உண்மையாகவே கூறுகிறேன். நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறீர்கள், நீங்கள் என்னைக் கேட்கிறீர்கள். உங்களுக்கு என் மேல் நம்பிக்கை உள்ளது. இல்லையென்றால்*

நீங்கள் என்னைக் கேட்க மாட்டீர்கள். சகோதரியே, நான் உன்னிடம் என்ன கூறுகிறேனோ அதை செய்வாய் என்று எனக்கும் உன் பேரில் நம்பிக்கை உண்டு.

***163.*** இதை நான் வேத வசனத்தைக் கொண்டு ஆதாரபடுத்த இயலாது. உனக்கு வேண்டுமானால்... உனக்கு அழகான சுருண்ட தலைமயிர் இல்லை என்றால், நீ ஒரு பெண்ணாயிருந்து, உன் கணவன், அல்லது நீ திருமணம் செய்து கொள்ளப்போகிற பையனின் பார்வையில் அழகாக காணப்பட வேண்டுமென்று விரும்பினால், நீ தலைமயிரைச் சுருள வைத்துக் கொள்வதைக் குறித்தோ, அல்லது - அவர்கள் அதை எப்படி அழைக்கிறார்கள் - தலைமயிருக்கு சாயமிடுவதைக் குறித்தோ என்னால் கூற இயலாது. அதைக் குறித்து கூற எனக்கு ஒன்றுமில்லை; அது உன்னைப் பொறுத்தது. பார்? நான் - நான்..... நீ, இடையே... என்ன செய்ய வேண்டுமென்று கர்த்தரிடம் கேள்,

அவர் உன்னிடம் கூறுவார். நான் வேத வாக்கியங்களின் அடிப்படையில் காரியங் களை விளக்க முயல்கிறேன். பார்?



# அவள் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டால் தன் தலையை கனவீனப்படுத்துகிறாள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #20

*Q.303.* **சகோ. பிரன்ஹாமே, மேல் தட்டை தலை மயிர் கத்தரிப்பு (Flattop hair cut) செய்து கொள்வது தவறா?**

***165.*** *இதைக் கேட்டது ஒரு ஆண் என்று நினைக்கிறேன். அப்படித்தான் என்று நினைக்கிறேன். நல்லது, சில ஸ்திரீகளும் அவ்விதம் செய்து கொள்கின்றனர். நிச்சயமாக. நான் இங்கு வேட்டை அதிகாரியாக இருந்த சமயத்தில் ஒரு முறை பேருந்து ஒன்றில் சென்று கொண்டிருந்தேன். நான் போய்க் கொண்டிருந்தபோது, நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன், ஒரு மனிதன் என்னுடன் பேசிக் கொண்டு வந்தான். அவன் வெல்டர் களின் தொப்பியை அணிந்து கொண்டிருந்*

தான். நான் அவனுடன் பேசிக் கொண்டிருந் தேன். அவன் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டே என்னுடன் உரையாடிக்கொண் டிருந்தான். அவன் வெல்டர்களின் மூக்குக் கண்ணாடியை போட்டுக் கொண்டு, அதை இப்படி மேலே தூக்கி விட்டிருந்தான். அது இங்கு செல்லர்ஸ்பர்க் என்னுமிடத்தில் நடந் தது. நான் உட்கார்ந்து கொண்டு அந்த ஆளிடம் பேசிக் கொண்டு வந்தேன். அவன் ஏதோ ஒன்றைச் சொன்னான். நாங்கள் இருவரும் சிரித்தோம். நான் அவனை காலில் அடித்தேன். நான், "பையனே, அது உண் மையில் சிரிப்பாக இருக்கிறது இல்லையா? என்றேன்.

நான் அவ்விதம் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த போது, எதிரில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒருத்தி "ரூத், நீ என்ன செய்யப் போகிறாய்..." என்று என் பக்கத்தில்

உட்கார்ந்து கொண்டிருந்த நபரைப் பார்த்துக் கேட்டாள்.

**166.** இவள் மேல் கோட்டை போட்டுக் கொண்டிருந்தாள், ஒரு ஆணைப்போல் பெரிய உருவமைப்பு கொண்டவளாய் இருந் தாள். அவள் அங்கு உட்கார்ந்து கொண்டு புகை பிடித்துக் கொண்டு, மூக்கின் வழியாய் புகையை வெளியே விட்டுக் கொண்டிருந் தாள். அது ஒரு ஆண் என்று எண்ணினேன். அவள் வெல்டர்கள் உபயோகிக்கும் டார்ச்சை யாரோ ஒருவர் கைத் தவறிப் போட்டு அது வேறொருவர் தலையில் விழுந்து அவர் மயங்கி விழுந்ததைப் பற்றி ஹாஸ்ய பாணியில் கூறி சிரிக்கத் தொடங் கினாள். நானும் சிரித்து, அவள் மனிதன் என்று நினைத்து அவள் காலை என் கையி னால் அடித்தேன். எனக்கு வித்தியாசம் தெரியவேயில்லை. உங்களால் அதை கண்டு

பிடிக்க முடியாது. "புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரித்தால், அது அருவருப்பானது" என்று வேதம் உரைக்கிறது (உபா.22:5). பார்த்தீர்களா?

**167.** இல்லை, சகோதரனே, உங்களுக்கு மேல் தட்டை தலைமயிர் கத்தரிப்பு விருப்ப மானால், நீங்கள் ஏறக்குறைய என் வயதை அடையும் வரைக்கும் காத்திருங்கள், அப்பொழுது உங்களுக்கு அது கிடைக்கும். (சகோ. பிரன்ஹாம் வழுக்கைத் தலையைக் குறிப்பிடுகிறார் - தமிழாக்கியோன்). எனவே... அது பரவாயில்லை. நான் அவ்விதம் கூற நினைக்கவில்லை, நண்பனே, சகோ. பிரன்ஹாம் உங்களுக்கு உண்மையை உரைக்கிறார் என்று நீங்கள் விசுவாசித்ததால், உங்கள் இருதயம் ஆசீர்வதிக்கப்படுவதாக. தேவன், ஒரு மனிதன் தன் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்ள வேண்டும் என்பதை

*தவிர, அவன் தலைமயிரால் மூடிக் கொள்வது பற்றி வேறெதையும் கூறவில்லை என்று எண்ணுகிறேன். அவன் ஸ்திரீயைப் போல் தலைமயிரை நீளமாக வளர விட்டால், அப்படி செய்வது ஒரு மனிதனுக்கு அவமானம் என்று வேதம் கூறுகிறது.*

***168.** இப்பொழுது, நீங்கள் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டு, ஒரு சிறு பையனாக இருந்தால்... அதைக் குறித்து நான் அதிகம் கூறியிருக்கிறேன் என்று எனக்குத் தெரியும். "மேல் தட்டை தலைமயிர் கத்தரிப்பு செய்து கொள்ளும் ரிக்கிகளே" என்பது போன்றவைகளை, அதை நான் கூறியிருக்கிறேன். பாருங்கள்?*

***169.** ஒரு மனிதன் தன் தலைமயிரை எவ்விதம் கத்தரித்துக் கொண்டிருக்கிறான் என்பதைக் குறித்து தேவன் கவலைப்படுவதில்லை என்று எண்ணுகிறேன், அவன்*

தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டால் சரி. ஏனெனில் அவனுக்கு தலை தேவன், ஆனால் ஸ்திரீக்கு தலை மனிதன், எனவே அவள்.. அவள் தலைமயிரைக் கத்தரித்துக் கொண் டால் தன் தலையை கனவீனப்படுத்துகிறாள். அப்படியானால் கனவீனமான ஒரு ஸ்திரீ விவாகரத்து செய்யப்பட்டு தள்ளப்பட வேண் டும். அது சரியா? எனவே ஒரு ஸ்திரீ தன் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டால், அவள் தவறான வாழ்க்கை வாழ்ந்தது போல் அவளைத் தள்ளிவிட அவளுடைய கணவ னுக்கு வேதப் பிரகாரமான உரிமையுண்டு. அது உண்மையென்று எத்தனை பேருக்குத் தெரியும்? வேதம் அவ்விதம்தான் உரைக் கிறது, ஏனெனில் அவள் தன் தலையை கனவீனப்படுத்துகிறாள். கனவீனமான எந்த பெண்ணுடனும் வாழலாகாது.



# அதை எவ்வளவு நீளமாக வைத்துக் கொள்ள முடியுமோ, அவ்விதம் வைத்துக் கொள், சகோதரியே



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #20

*Q.305.* **சகோ. பிரன்ஹாமே, ஸ்திரீகள் எவ்விதம்** *(ஓ, என்னே!)* **தங்கள் தலை மயிரை அணிந்து கொள்ள வேண்டும்?**

***171.*** *மறுபடியும், நீங்கள் விரும்பும் எந்த விதத்திலும், 1 தீமோ. 2:9. பாருங்கள்? "ஸ்திரீகள் தகுதியான வஸ்திரத்தினால் தங்களை அலங்கரிக்க வேண்டும்".* **தேவனுக்கு பிரீதியாயுள்ள விதத்தில் என் தலைமயிரை அணிந்து கொள்ள விரும்புகிறேன்.** *(அருமை சகோதரியே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக).* **நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. எங்களுக்காக ஜெபியுங்கள்.** *அவள் தன் பெயரை கையொப்பமிட்டிருக்கிறாள்.*

*172.* ஷாரோன், நிச்சயமாக, சகோதரியே! தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. அதை எவ்வளவு நீளமாக வைத்துக் கொள்ள முடியுமோ, அவ்விதம் வைத்துக் கொள், சகோதரியே. அது ஒரு சிறு பெண். தேவன் உன்னை ஆசீர்வதிப்பராக, இனியவளே, அது சரியாயுள்ளது. அவ்விதமே செய்.



# முன் பாகத்தில் தலை மயிரைக் கத்தரித்தால், அது நீண்ட தலைமயிராகக் கருதப்படுமா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

*Q.343.* **அவர்கள் அதைக் கத்தரிக்கும் போது.. முன் பாகத்தில் தலை மயிரைக் கத்தரித்தால், அது நீண்ட தலைமயிராகக் கருதப்படுமா?** *(இப்பொழுது, ஒரு நிமிடம் பொறுங்கள், இதை நான் புரிந்து கொள்ளட்டும்)* **அவர்கள்... அது நீண்ட தலைமயிராக...**

*184. நல்லது, ஒருக்கால் அவர்கள், "அவர்கள் தலைமயிரை முன்பாகத்தில் கத்தரிக்கும் போது, அது அப்பொழுதும் நீண்ட தலைமயிராக கணக்கிடப்படுமா?" என்னும் அர்த்தத்தில் கேட்டிருக்கக் கூடும். அது ஒருபோதும் இனி நீண்ட தலைமயிராக கணக்கிடப்படாது, ஏனெனில் அவர்கள் அதை கத்தரித்து விட்டார்கள். பாருங்கள்? ஆனாலும் ஒரு மனிதன் தன் நீண்ட கால்*

*சட்டையை மூன்று முறை வெட்டி அப் பொழுதும் அது மிகவும் குட்டையானதாக இருந்தது போல. என்ன சொல்கிறீர்கள்? என்ன சொல்கிறீர்கள்? (சகோ. பிரன்ஹாம் கூடியிருந்தவர்களில் யாரோ ஒருவரிடம் உரையாடுகிறார் - ஆசி). ஓ, அதைக் குறித்து தான் அவர்கள் கேட்டிருக்கிறார்களா? என் மகளை நான் கேலி செய்வதுண்டு. அவை களை நான் "பூம்ஸ்" என்று அழைப்பதுண்டு, "பாங்ஸ்", அது என்ன பெயரானாலும், இப்படி முன்பாகத்தில் கத்தரித்து விடுதல், அது உங்களுக்குத் தெரியும்.*

*185. நல்லது, நான் நினைக்கிறேன், முன் பாகத்தில் தலை மயிரைக் கத்தரித்துக் கெண்டிருக்கும் சிறு பெண்கள்... ஒருக்கால் உங்கள் தாயார் அதைக் குறித்து உங்களிடம் கூறக் கூடும் (பாருங்கள்), நீங்கள் அவ்விதம் கத்தரித்துக் கொள்ள வேண்டுமென்று அவள் விரும்பினால். நான் நினைக்கிறேன், இருபத் தைந்து வயது பெண் முன்பாகத்தில் தலை*

*மயிரைக் கத்தரித்துக் கொண்டு, சிறு பெண் ணைப் போல் காணப்பட விரும்பினால், அவள் காரின் கண்ணாடி வழியாக ஏற் கனவே கடந்து வந்ததை பின் நோக்க முற்படுகிறாள். சகோதரியே, நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய் என்பதை பார், நீ ஏற்கனவே கடந்து வந்ததை அல்ல. பார்?*

***186.*** *இப்பொழுது, தலைமயிரைக் கத்த ரித்துக் கொள்ளும் விஷயத்தில் இதை உங்க ளிடம் கூற விரும்புகிறேன். நீங்கள் இவ்வ ளவுதான் கத்தரித்துக் கொள்ள வேண்டும், இதற்கு மேல் அல்ல என்பதை ஆதரிக்கும் எந்த வேத வசனமும் எனக்கு இல்லை. அதற்கு என்னிடம் எந்த வேத வசனமும் கிடையாது. சகோதரியே, சகோதரனே, யார் இந்த கேள்வியைக் கேட்டிருந்தாலும், என் னால் உங்களிடம் கூற இயலாது.*

***187.*** *ஆனால் ஒரு காரியத்தைக் கூற விரும்புகிறேன். நான் விரும்புவது என்ன வெனில்... என் மகள்கள் ரெபேக்காவும்*

சாராவும் கூட சிறு பிள்ளைகளாயிருந்த போது அவ்விதம் கத்தரித்துக் கொண்டுள் ளனர். அவர்கள் முன் பாகத்தில் தலை மயிரைக் கத்தரித்துக் கொண்டு, பின்பாகத் தில் தலைமயிரைப் பின்னியிடுவதை நான் கண்டிருக்கிறேன், முன்பாகத்தில் தலைமயிரை இவ்விதம் வாரி விட்டுக் கொள்வார்கள். இப்பொழுது, அவர்களின் சார்பாக நான் பேச வரவில்லை. பாருங்கள்? இல்லை, ஐயா! என்னைப் பொறுத்தவரையில், அவர் கள் தங்கள் தலைமயிரில் கத்தரிக்கோலை வைக்காமல் இருந்திருந்தால் நலமாயிருக்கும். ஆனால் தலைமயிர் இவ்விதம் நீளமாக தொங்கிக்கொண்டிருந்து, தங்கள் கண்களின் மேல் விழாதபடி முன் பாகத்தில் மட்டும் ஒருக்கால் சிறு பெண்கள் கத்தரித்துக் கொண்டால், அது தவறா என்று என்னால் கூற இயலவில்லை. அது தவறில்லை என்று நான் நினைக்கிறேன், பாருங்கள்? ஆனால் நீங்கள்... சகோதரிகளாகிய நீங்கள், உங்க ளால் முடிந்தால், கர்த்தர் அதை எவ்விதம்

*உண்டாக்கியிருக்கிறாரோ அவ்விதமே அதை விட்டு விடுவதை நான் விரும்புவேன். பாருங் கள்?*

***188.*** *பெண்கள் அழகாக காணப்பட வேண்டுமென்று விரும்புகின்றனர் என்று அறிவேன்; அது அவர்களுடைய இயல்பு. அவர்கள் அப்படித்தான் காணப்பட வேண் டும். பாருங்கள்? அது நல்லதுதான், ஆனால் உலகத்தாரைப் போல் காணப்படாதீர்கள் (பாருங்கள்?) உலகத்தாரின் மாதிரியைப் பின் பற்றாதீர்கள். அது தவறு... அதை நீங்கள் அவ்விதம் கத்தரித்துக் கொள்ள விரும்பி னால், அதை கத்தரிக்காதீர்கள். உங்கள் தலைமயிர் பின்னப்பட்டு நீளமாக தொங்கி கொண்டிருந்தால், அதை நீளமாகவே விட்டு விடுங்கள். நீங்கள் சிறுமிகளாக இருக்கும் பட்சத்தில்...*

***189.*** *நியூயார்க்கில் இருக்கும் என் மாமனுக்கு ஒரு சிறுமி இருந்தாள். அவளுக்கு மிகவும் அழகான தலைமயிர் இருந்தது. அது*

ஆழ்ந்த பழுப்பு நிற தலைமயிர். அவள் தலைமயிரை பின்னி விடுவது வழக்கம். என் தாயாருக்கு... அவர்களுக்கு பின்னின தலை மயிர் முழங்கால் வரை நீண்டிருக்கும். இந்த சிறுமிக்கும் அதே விதமான பின்னின தலைமயிர் இருந்தது; அவளுடைய பெயர் ஜாக்வலின். அவள் அதன் ஒரு பாகத்தை இப்படி நீளமாக வாரி விட்டு, இதை இப்படி கத்தரித்துக் கொண்டிருப்பாள். அது ஏறக்குறைய பதினைந்து, பதினெட்டு, இருபது ஆண்டுகளுக்கு முன்பு. அவள் ஏன் தலைமயிர் முழுவதையும், இப்படி பின்னால் வாரிக் கொள்ளவில்லை, அது இந்த நவீன 'பீட்டில்ஸ்' வைத்திருப்பது போன்று இருப்ப தைக் காட்டிலும் இன்னும் அழகாயிருந் திருக்குமே என்று நான் வியந்த துண்டு... ஓ, அது உண்மை; நானாயிருந்தால் அவ்விதம் செய்ய மாட்டேன். 'பீட்டில்ஸ்'களைப் போல் காணப்படும் எதுவும், உலகத்தாரைப் போல் தோற்றமளிக்கும், அதை விட்டு விடுங்கள். ஆம்!



அவள் ஏதாவதொன்றிற்கு தாயாக இருக்க
வேண்டும். ஏனெனில் அது அவளுக்கு
தேவனால் அளிக்கப்பட்ட இயல்பு



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 65-11-25 கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு

85. இயேசு அதைக் குறிப்பிட்டிருக் கிறார் என்பதை இன்று நீங்கள் கவனிக்க விரும்புகிறேன். நீங்கள் விரும்பினால் அதை நாம் இப்பொழுது படிக்கலாம். இது நிறைவேறும் என்று இயேசு குறிப்பிட் டுள்ளார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவருடைய வாழ்நாளின் கடைசி சில மணி நேரங்களில், அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, இதைக் கூறினார். அதை நாம் படிப்போம். லூக்கா சுவிசேஷம் 23ம் அதிகாரம் 27ம் வசனம் முதல். இதை ஞாயிறு பள்ளி பாடமாகக் கருதி சிறிது நேரம் இதைப் பார்ப்போம். இதை கோடிட்டு வைத்திருக்கிறேன் என்று

நினைக்கிறேன் - இயேசு கல்வாரிக்குச் செல்லுதல். நான் படிக்கும்போது கவனமாய் கேளுங்கள். சரி. லூக்கா 23:27. அந்த பகுதிதான் என்று நினைக்கிறேன். அப்படித்தான் என் குறிப்பு புத்தகம் கூறுகிறது. ஆம், இதோ உள்ளது.

திரள் கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள்.

இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.

இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளை பெறாத கர்ப்பங்களும் பால் கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும் (இன்றுள்ள நிலையை யோசித்துப்

பாருங்கள். பிள்ளை பெறுதல் அவமான மென்று அவள் நினைக்கிறாள். பாருங் கள்?)

அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள் மேல் விழுங்களென்றும், குன்று களை நோக்கி : எங்களை மறைத்துக் கொள்ளுங்களென்றும் சொல்லத் தொடங் குவார்கள். பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்ட மரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள் என்றார்.

லூக். 23:27-31

86. ஸ்திரீகள் தங்களுக்குப் பிள்ளைகள் வேண்டாம் என்று சொல்லும் காலத்தை இயேசு குறிப்பிடுகிறார். அவர்களுக்கு நாய் அல்லது பூனை அல்லது அப்படி ஏதாவதொன்று போதும், ஆனால் பிள்ளை கள் வேண்டாம். ஏன்? அவள் பிள்ளை பெற்றால், அந்த வயதான தாயாகிய

ஹப்பர்ட் போலாகிவிடுவாள். பாருங்கள்? அவளுக்கு தேவையில்லை ... அதுதான் ஹாலிவுட்டின் குறிப்பு. ஸ்திரீகளுக்கு வயதான தாயாகிய ஹப்பர்டைப் போல் இருக்க விருப்பமில்லை. எனவே அவள் குழந்தை உண்டாகாதபடிக்கு; அவனோ அல்லது அவளோ அறுவை சிகிச்சை செய்து கொள்கின்றனர். அவர்களுக்கு குழந்தைகள் வேண்டவே வேண்டாம்.

87. இயேசு அந்த நாளைக் குறிப்பிட்டார். அவர் என்ன சொன்னார்? ''அந்த காலத்தில் அவர்கள் மலைகளையும் குன்றுகளையும் நோக்கி: எங்கள் மேல் விழுங்கள் என்பார்கள்" என்றார்.

அவள் விருந்துகளுக்குச் செல்ல வேண்டு மென்று கருத்தடை முறைகளைக் கையாளுவாள். குழந்தைக்குப் பால் கொடுக்கவேண்டும் என்னும் தொல்லை

அவளுக்கு இருக்கக்கூடாது. அது அவளுடைய உடலழகைக் கெடுத்து விடும். அவள் கர்ப்பிணியாகிவிட்டால் உருக்குலைந்து விடுவாள். அவள் முன்புபோல் காணமாட்டாள். அவளுடைய கணவனும் அறியாமையின் காரணமாக, அவள் வழியில் செல்ல அனுமதிக்கிறான். அவள் அவனுக்கு ஒரு குழந்தையைப் பெற்றுத்தர மறுக்கிறாள். இயேசு அதை குறிப்பிட்டு, அவர்கள் அப்படி செய்து கொண்டிருக்கும் அந்த நாளில் மலைகள் தங்கள் மேல் விழ வேண்டுமென்று கதறுவார்கள் என்றார். அது கர்த்தருடைய வருகை. அதிகமான பணத்தை பூனைகளுக்கும், நாய்களுக்கும் தாயாக இருப்பதற்கு செலவு செய்வார்கள். அது சரி. அவள் ஏதாவதொன்றிற்கு தாயாக இருக்க வேண்டும். ஏனெனில் அது அவளுக்கு தேவனால் அளிக்கப்பட்ட இயல்பு.

88. நான் கவனித்திருக்கிறேன். நான் பெரிய மிருகங்களை வேட்டையாடுவது வழக்கம். இலையுதிர்காலத்தின்போது, ஒரு பெண் கரடி ஆண் கரடியுடன் சேருகிறது. அதன் பிறகு அது குட்டிகளை ஈனுகிறது. அதற்கு ஏற்கனவே குட்டிகள் உள்ளன. அவை பருமனான குட்டிகள், ஒவ்வொன் றும் சுமார் நூறு பவுண்டு அல்லது அதற்கும் அதிகமான எடையிருக்கும். பெண் கரடி, அது வேறு குட்டிகளை ஈனும் நேரம் நெருங்கும்போது, ஏற்கனவே வளர்ந்த குட்டிகள் தாங்களே ஓடியாடவும் படுத்துக் கிடக்கவும் அவைகளைப் பழக்குவிக்கிறது. கரடி குட்டிகள் ஈனும் மாதம் பிப்ரவரி. அது பிப்ரவரி மாதம் என்று தாய்க் கரடிக்கு தெரியவே தெரி யாது. அது குட்டிகளை சிறுசாக்குகளில் ஈனுகின்றது. இந்த சிறு சாக்குகள் எப்படி தானாகவே திறக்கும்படி தேவன் செய்தார்!

அவை காண்பதற்கு 'செலோபோன்' (Cellophone) சாக்குகள் போன்றுள்ளன. இந்த குட்டிகள் வழி கண்டு பிடித்து வருகின்றன. தாய்க்கரடி நன்றாக உறங்கிக் கொண்டிருக்கும். அது அக்டோபர் மாதத் திலிருந்து ஒன்றும் சாப்பிடுவதில்லை. அது பிப்ரவரி மாதம். குட்டிகள் தாயிடம் வந்து மே மாதம் நடுவில் வரைக்கும் பால் குடிக்கும். குட்டிகள் பால் குடித்து நன்றாக வளருவதை தாய் கரடி காண்கிறது. அவை ஒவ்வொன்றும் பத்து அல்லது பதினைந்து பவுண்டு எடையிருக்கும். ஆகாரம் உண்ணாமல் தாய்க்கரடிக்கு பால் எப்படி உண்டாகிறதென்பது தேவனுடைய திட்டமாகும். அது தானும் ஜீவித்து அங்கு குட்டிகளுக்கு பாலை உற்பத்தி செய்து தருகிறது. அந்த ஈனும் காலத்தில், அதற்கு குட்டிகள் உண்டாகாமல் போனால்... அது சென்ற ஆண்டு ஈன்ற கரடிக் குட்டிகளைத்

தேடிப் பிடித்து, கோடை காலம் முழுவதும் அவைகளுக்குப் பால் கொடுக்கிறது. அது தேவனால் அதற்கு அளிக்கப்பட்ட இயல்பு. அது எதற்காவது தாயாக இருக்க வேண்டும்.

89. ஒரு ஸ்திரீக்கு தன் கணவனுக்குப் பிள்ளை பெற்றுத்தர பிரியமில்லாதிருந் தால், அவள் நாய் அல்லது பூனை ஏதாவதொன்றை தாயைப் போல் வளர்க்கவேண்டும். அது பெண்களின் இயல்பு. ஆனால் தன் கணவனுக்குப் பிள்ளைப்பெற்று தேவனுடைய சேவைக் கென்று வளர்ப்பதென்பது அவளுடைய கருத்துக்கு முற்றிலும் அப்பாற்பட்டது. அவள் அப்படி செய்ய நேர்ந்தால், 1965ம் ஆண்டில் இவ்வகை பெண்களைக் கொண்ட பாவத்தை சிநேகிக்கும் சமுதாயம் அவளை இழிவாகக் கருதும்.



# பெண்களின் தலைமயிர்

## என்பதின் பேரில் கேள்விகளும் பதில்களும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து